தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**17 வயதுப்பிரிவு** (01.01.2005 – 31.12.2006 வரையில் பிறந்தோர்)

## மே பதினெட்டின் மெய்ப்பொருள்

பெருமை மிகு வரலாறும் ஈகம் நிறை அர்ப்பணிப்பும் வீரமிகு உயிர்கொடையும் கொண்டு சிகரத்தில் இருக்கிறது என் தாய்நாடு. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே எம் முந்தையர்கள் மரபுவழியாக என் தாய்மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள். அதற்கான தொல்லியல் சான்றுகள் எம்முன்னே இருக்கின்றன. எம் தாய்நிலத்தில் வந்தேறு குடிகளாய் வட இந்தியாவிலிருந்து வந்திறங்கினர் ஆரியர். பின்னர் இவர்கள் சிங்களவராகத் தம்மை இன அடையாளப்படுத்தினர். அதன் பின் எம் நிலங்கள் மெல்லமெல்ல அவர்களிடம் பறிபோகத் தொடங்கின.

காலத்துக்குக் காலம் எம் தாய்நிலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அந்நியப் படையெடுப்புகளும் அதை எதிர்த்து வீரமுடன் செயற்பட்ட தமிழ் அரசுகளின் பெருமையும் நாம் அறிவோம். இறுதியாய் எம்மண்ணைத் தம் ஆளுகைக்குள் வைத்திருந்த பிரித்தானியர், எம் தேசத்தைச் சிங்கள தேசத்துடன் இணைத்து, சிங்களப் பேரினவாதிகளின் கைகளில் ஆட்சியுரிமையைக் கொடுத்துவிட்டு வெளியேறினர்.

பின்னர் சிங்களப் பேரினவாதம் ஊதிப் பெருத்தது. தமிழரின் நிலங்கள் குடியேற்றம் என்ற போர்வையில் வன்பறிப்புச் செய்யப்பட்டன. தமிழினப் படுகொலைகள் அரங்கேறத் தொடங்கின. தமிழினத்தை அழிக்கும் சட்டங்கள் திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்டன. தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழர்களின் கல்வியிலும் பேரினவாத அரசு கைவைத்தது. இதனால் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டிய சூழலுக்குத் தமிழ் இளையோர் தள்ளப்பட்டனர். அவர்களின் ஆதரவுடன் எமது நிலத்தை மீட்டிடத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டத்தைத் தொடக்கினார்.

தலைவர் மாமாவின் வழிகாட்டலில் வீரமிகு போரியல் வெற்றிகளால் நிமிர்ந்து நின்ற தமிழீழத்தை உலகமே தலைநிமிர்த்திப் பார்த்தது. தென்கிழக்காசியாவில் வல்லமை மிக்கவர்களாய் வளர்ந்து வரும் எம்மை அழிக்க, வல்லாதிக்க சக்திகளின் துணையுடன் தமிழின அழிப்பைக் கூர்மைப்படுத்தியது சிங்கள அரசு.

ஆண்டாண்டு காலமாக சிங்களப் பேரினவாத அரசால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பு நீண்டு விரிந்து முள்ளிவாய்க்காலில் மனிதப் பேரவலமாக உருக்கொண்டது. உணவின்றி, மருந்துகளின்றி, அடிப்படை வசதிகள் எதுவுமின்றி எம் மக்கள் பட்ட துயரங்களை எப்படி மறப்பது? காயமும் இரத்தமுமாய், பசியும் பட்டினியுமாய், சிறியவரும் பெரியவருமாய் எம்மினம் பட்ட துயரத்தை அண்டை நாடுகளும் ஆதிக்க சக்திகளும் கண்டுகொள்ளாதிருந்தனர். இருபத்தோராம் நூற்றாண்டின் மிகப்பெரிய தமிழின அழிப்பை நடாத்தி முடித்தது சிங்களப் பேரினவாத அரசு.

முள்ளிவாய்க்காலில் நடந்து முடிந்த தமிழின அழிப்புக்கான நீதி பதின்மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் முறையாகக் கருத்தில் எடுக்கப்படவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மீட்கப்படவில்லை. எம் மக்கள் படும் அவலங்கள் ஓயவில்லை. சிங்களத்தின் சூறையாடல் தொடர்கிறது. தமிழீழ நிலப்பரப்பில் 30 விழுக்காட்டிற்கும் மேலான நிலப்பரப்பு வன்பறிப்புச் செய்யப்பட்டுவிட்டது. ஆகமொத்தத்தில், எமது தாயகத்தில் தமிழினத்தின் இருப்பு திட்டமிட்டு இல்லாதொழிக்கப்படுகிறது. மிக நுணுக்கமாக இனச்சுத்திகரிப்பு நிகழ்த்தப்படுகிறது. இதைப் பார்த்தும் புரிந்துகொண்டும் இன்னும் வாளாவிருப்போமா? தமிழர் சிந்தனையிலும் செயலாற்றலிலும் கறை படிந்து விட்டதுவோ? வேறொருவர் எமக்கேதும் செய்வாரெனக் காத்திருப்பதுவும் வீண் கதைகள் பேசிக் காலத்தைக் கொல்வதுவும் இனி வேண்டாம்!

நாம் வாழும் தேசமெல்லாம் எமது உரிமை மீட்புக்காய்ப் பணி செய்வோம். தமிழின அழிப்புக்கான அனைத்துலக விசாரணையை நடாத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்கிச் செயற்படுத்துவோம். நாம் தனிநாடாகப் பிரிந்து சென்று வாழ்வதற்கான சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவதற்கு அனைத்துலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்போம். இச்செயற்பாடுகளை எமது இலக்கை அடையும் வரை தொடர்ந்து முன்னெடுப்போம்.

நன்றி, வணக்கம்.